**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 126/ந/2022
நாள். 19.09.2022

திருமதி. I.குழந்தையம்மாள்,
பரமக்குடி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
பரமக்குடி நகராட்சி. – எதிர் மனுதாரர்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, காமராஜர் நகர், Y 16–A, 12/338, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. I.குழந்தையம்மாள் என்பவரின் 10.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.08.2022 அன்று பெறப்பட்டு 126/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, காமராஜர் நகர், Y 16–A, 12/338, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. I.குழந்தையம்மாள் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“பரமக்குடி நகராட்சியில் நான் TURIP 2019/2020 திட்டத்தின் கீழ் 6 கோடி ரூபாய் மதிப்பிலான சாலைப் பணிகளும், IUDM 2020/21 திட்டத்தின் கீழ் 3 கோடி ரூபாய் மதிப்பிலான சாலைப்பணிகளும், 14 CFC திட்டத்தின் கீழ் 45 இலட்சம், 31 இலட்சம் ரூபாய் மதிப்பில் சாலைப் பணிகளும் செய்து முடித்தேன். மேற்கண்ட வேலைகளுக்கான பில் பட்டியலில் முன் வைப்புத் தொகையாக 1% வீதம், கூடுதல் வைப்புத் தொகையாக 5% சேர்த்து பில்லில் பிடித்தம் செய்யப்பட்டது. வேலை செய்து முடித்து 1 வருடம் கழித்து அந்த தொகையை எங்களது டெபாசிட் பணத்தை எங்களுக்கு திருப்பி வழங்க வேண்டும். இதில் பில்லில் பிடிக்கப்படும் 5% கூடுதல் வைப்புத் தொகை 1 வருடத்திலும், மற்ற தொகைகள் அந்த வருடத்திற்குரிய கணக்கு தணிக்கை முடிந்தவுடன் வழங்கப்பட வேண்டும். மேற்கண்ட தொகைகள் டெபாசிட்டுக்கான தனிக் கணக்கில் வைத்திருக்க வேண்டும். வேறு இனங்களுக்கு செலவு செய்யக் கூடாது.

மேற்கண்ட வேலைகள் செய்து முடித்து ஓராண்டு முடிந்து விட்டது. மேற்கண்ட வேலைகளுக்கான பில்லில் பிடித்தம் செய்யப்பட்ட எனது டெபாசிட் தொகை ரூ 42 இலட்சத்தை திருப்பித் தருமாறு பரமக்குடி நகராட்சி ஆணையாளரிடம் பலமுறை கேட்டும் கடந்த 4 மாதமாக தர மறுக்கிறார். நகராட்சி டெபாசிட் கணக்கில் பணம் இல்லை என்றும், இதுவரை காண்ட்ராக்டர்களின் பில்லில் பிடித்தம் செய்கின்ற பணம் நகராட்சி டெபாசிட் கணக்கில் செலுத்தப்படவில்லை என்றும் எனவே எனக்கு தர முடியாது என்றும் தெரிவிக்கிறார்.

காண்ட்ராக்டர்களின் பில்லில் பிடித்தம் செய்யப்படும் டெபாசிட் தொகை தனிக்கணக்கில் வைத்திருக்க வேண்டும். அப்படி வைக்காதது அதிகாரிகளின் நிர்வாக தவறு அதற்காக காண்ட்ராக்டர்களுக்கு திருப்பித் தர மறுப்பது நியாயமற்ற செயல். தற்பொழுது இருக்கும் ஆணையாளர் இதற்கு முன் இருக்கும் ஆணையாளர்களை குறை சொல்கிறார். ஆனால் ஆணையாளர் கடந்த பிப்ரவரி 2022 முதல் காண்ட்ராக்டர்களின் பில்லில் பிடித்தம் செய்யும் டெபாசிட் தொகைகளை நகராட்சி டெபாசிட் கணக்கில் செலுத்தவேயில்லை. அந்த பணம் எங்கே சென்றது என்பதும் தெரியவில்லை. இதற்கு முன் இருந்த அதிகாரிகள் செய்த தவறை தற்போதைய ஆணையாளரும் செய்துள்ளார். அப்படி இருக்கும்போது எங்களது பணத்தை திருப்பித் தர வேண்டியது ஆணையரின் பொறுப்பு.

மேற்கண்ட வேலைகளுக்கான டெபாசிட் தொகைகளை எனக்கு வழங்கலாம் என்று பரமக்குடி நகராட்சி பொறியாளர்கள் சான்று வழங்கிய பின்பும் ஆணையாளரால் கடந்த 4 மாதமாக எனக்கு வழங்க மறுக்கப்படுகிறது. மேலும் எனக்கு வழங்கக் கூடாது என்ற நோக்கத்தில் வேண்டுமென்றே ஏதேனும் ஒரு குறிப்பை எழுதி பைல் திருப்பி அனுப்பப்படுகிறது.

மேலும் 2020–21–ல் பரமக்குடி நகராட்சியில் 5 கோடியே 22 லட்சம் ரூபாய்க்கு வேலை பார்த்துள்ளேன். அதற்கு வருமான வரியாக எனது பில்லில் ரூ.5,22,053/– பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் எனது வருமான வரி கணக்கில் ரூ 2,65,000/– மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. மீதி பணம் ரூ 2,50,000/– த்தை 1 ½ வருடமாகியும் இதுவரை செலுத்தவில்லை. நான் பலமுறை முறையிட்டும் இதுவரை என் கணக்கில் பணம் செலுத்தப்படவில்லை. இதற்கு ஆதாரமாக 2020–21 ஆண்டிற்குரிய வருமான வரிக்கான 26 AS இணைக்கப்பட்டுள்ளது.

அதே போல் 2021–22 ஆம் ஆண்டில் 3 கோடியே 84 இலட்சத்திற்கு வேலை பார்த்து காசோலை பெற்றுள்ளேன். அதில் வருமான வரியாக ரூ.3,84,000/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எனது வருமான வரி கணக்கில் ரூ 2,65,228/– மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. மீதி பணம் ரூ 1,15,000/– என்ன ஆனது என்று தெரியவில்லை.

மேலும் பரமக்குடி ஆணையாளர் பொறுப்பேற்ற பிப்ரவரி 2022 மாதத்தில் இருந்தே பரமக்குடி நகராட்சியில் நடைபெறும் எந்த ஒரு டெண்டர் குறித்த அறிவிப்பும் எனக்கோ மற்ற காண்ட்ராக்டர்களுக்கோ தெரியப்படுத்துவதில்லை. மிக ரகசியமாக டெண்டர் நடத்தப்படுகின்றது. குறிப்பாக கடந்த 24.05.2022 மற்றும் 25.05.2022–ல் நடைபெற்ற டெண்டர்கள் குறித்த அறிவிப்பு எனக்கு வழங்கப்படவில்லை.

நான் பலமுறை கேட்டும் எனது டெபாசிட் தொகை ரூ 42 இலட்சத்தை ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு திருப்பித் தர மறுக்கப்படுகிறது. மேலும் எனது பில்லில் பிடித்தம் செய்து கட்டாமல் உள்ள 2020–21, 2021–22 வருமான வரி பாக்கியையும் கட்ட மறுக்கப்படுகிறது. எனக்கு தர வேண்டிய டெபாசிட் பணத்தை உடனடியாக எனக்கு வழங்குமாறும், எனது வருமான வரி கணக்கில் செலுத்த வேண்டிய பாக்கித் தொகையை உடனடியாக கட்டுமாறும்,

இனி வரும் காலங்களில் பரமக்குடி நகராட்சியில் நடைபெறும் டெண்டர்கள் குறித்த அறிவிப்பை தபால் மூலம் எனக்கு தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் பரமக்குடி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

பரமக்குடி நகராட்சி ஆணையாளர் தனது 05.09.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"பரமக்குடி நகராட்சியில் ஒப்பந்ததாரரான திருமதி.I.குழந்தையம்மாள் என்பவர் கீழ்கண்ட திட்டப்பணிகள் செய்து அதற்குரிய பட்டியல் பெற்றுள்ளார். மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பட்டியலில் ஒப்பந்தத் தொகையில் 5% பிணைய வைப்புத்தொகையாக பிடித்தம் செய்த தொகை டெபாசிட் பதிவேட்டில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | TURIP 2019/2022 | ரூ 600.00 இலட்சம் |
| 2. | IUDM 2020/21 | ரூ 300.00 இலட்சம் |
| 3. | 14 CFC | ரூ 45.00 இலட்சம் |
| 4. | 14 CFC | ரூ 31.00 இலட்சம் |

மேற்கண்ட திட்டப் பணிகளுக்கு அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகையில் நகராட்சியின் பங்குத்தொகை 10% ஆகும். அதன்படி இந்நகராட்சியின் பொதுநிதியின் கீழ் ரூ 100.00 இலட்சம் இப்பணிகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஆனால் இந்நகராட்சியின் வரி வருவாய் மிகவும் குறைவாக உள்ளதால், திட்டப்பணிகளுக்கு நகராட்சியின் பங்களிப்பு தொகை ரூ 100.00 இலட்சமாக உள்ளது. நகராட்சியில் நிதியில்லாத காரணத்தினால் பங்களிப்பு தொகையை செலுத்த இயலவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய வைப்புத்தொகை பதிவேட்டின்படி ரூ 38,20,772/– வழங்கப்பட வேண்டும். அதன்படி இந்நகராட்சியால் கடந்த 18.08.2022 அன்று ஒப்பந்ததாரர் திருமதி.I.குழந்தையம்மாள் அவர்களுக்கு ரூ 22,38,587/– வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சியில் கடந்த ஆறுமாத காலமாக சொத்துவரி உயர்வு தொடர்பான பணிகள் நடந்து வருவதால் கடந்த ஆறுமாத காலமாக பொதுமக்களிடம் வரி வசூல் செய்யும் பணி செய்ய இயலவில்லை. அதனால் இந்நகராட்சிக்கு வரவேண்டிய வருவாய் காலதாமதமாக இருப்பதால் நகராட்சி ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம் மற்றும் அத்தியாவசிய செலவுகளுக்கு தேவையான நிதிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இந்நகராட்சியிலிருந்து செலுத்த வேண்டிய மின்கட்டணம் நிலுவை ரூ 77.00 இலட்சம் செலுத்த இயலாத நிலை உள்ளது. எனவே இந்நகராட்சியின் நிதிநிலைக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகை பகுதிப்பகுதியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் பரமக்குடி நகராட்சி ஆணையரும் 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகுமாறு 01.09.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள், 06.09.2022 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

(5) எதிர்மனுதாரான பரமக்குடி நகராட்சி ஆணையாளர் (பொ) மற்றும் மேலாளர் திரு.மா.தங்கராஜ் என்பவர் 06.09.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பரமக்குடி நகராட்சியில் ஒப்பந்ததாரரான திருமதி.I.குழந்தையம்மாள் என்பவருக்கு, பதிவேட்டின்படி ரூ. 38,20,772/– வழங்கப்பட வேண்டும். இதன்படி பரமக்குடி நகராட்சியால் கடந்த 18.8.2022 அன்று மேற்கண்ட ஒப்பந்ததாருக்கு ரூ 22,38,587/– வழங்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனுதாரருக்கு சேரவேண்டிய நிலுவைத்தொகையை பரமக்குடி நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப அவ்வப்போது வழங்கப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 05.09.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, பரமக்குடி நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியை சார்ந்த மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் என்பவர் தனது முறையீட்டு மனுவில் பரமக்குடி நகராட்சி மூலமாக 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தப்புள்ளி மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்பணிகள் செய்து முடிக்கப்பட்டும், நகராட்சியில் பிடித்தம் செய்யப்பட்ட முன்வைப்புத் தொகை திரும்ப வழங்காதது மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி தொகையினை உரிய கணக்கில் செலுத்தாதது குறித்து நகராட்சி ஆணையாளர் மீது புகார் தெரிவித்துள்ளார்.

பரமக்குடி நகராட்சியில் முறையீட்டு மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் என்பவரால் 2019–2022 ஆம் ஆண்டுகளில் நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் (TURIP) ரூ 600 இலட்சம் மதிப்பீட்டிலும், 2020–21 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தின்கீழ் (IUDM) ரூ 300 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 14வது நிதிக்குழுத் திட்டத்தின் கீழ் (14 CFC) ரூ 76 இலட்சம் மதிப்பீட்டிலும் மனுதாரரால் பல்வேறு சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, மனுதாரருக்கு நகராட்சியால் திரும்ப வழங்க வேண்டிய பிணைய வைப்புத்தொகையில், அவருக்கு வழங்க நிலுவையிலிருந்த ரூ 40,76,512/– தொகையில் ரூ 22,38,587/– தொகையானது 18.08.2022 அன்று நகராட்சியால் மனுதாரருக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது. பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கான புதிய சொத்துவரி நிர்ணயம் செய்வது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், கடந்த 6 மாதங்களாக நகராட்சி மூலம் சொத்து வரியினை வசூல் செய்ய இயலாமல், நகராட்சியில் வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை ஆணையரின் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது. இந்நிலையில் நகராட்சியின் மின்கட்டணம் நிலுவை, ஊழியர்களின் சம்பளம் மற்றும் அத்தியாவசிய செலவுகளுக்கு தேவையான நிதி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதன் காரணமாக, மனுதாரருக்கு வழங்க வேண்டிய நிலுவை முன்வைப்புத் தொகையினை நகராட்சியின் நிதிநிலைக்கேற்ப பகுதிப்பகுதியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்பதையும் ஆணையரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

இதற்கிடையில் மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் இம்முறைமன்ற நடுவ முகவரியிட்ட 10.09.2022 நாளிட்ட கடிதத்தில் பரமக்குடி நகராட்சியால் வழங்கப்பட வேண்டிய நிலுவைக் தொகையான ரூ 18,37,925/– முழுவதும் 09.09.2022 அன்று எவ்வித நிலுவையுமின்றி அனைத்து முன்பணத் தொகையும் முழுவதும் பெற்று கொண்டதாக தெரிவித்துள்ளார்.

ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்படும் அனைத்து வைப்புத் தொகைகளும் வைப்புத்தொகைக்கான தனி வங்கிக் கணக்காக பராமரிக்கப்பட வேண்டும் என்பது குறித்து, நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் வெளியிடப்பட்ட "நகராட்சி கணக்கியல் கையேட்டில்" (Municipal Accounting Manual) பத்தி 7.5 (b) (1)ல் "Receipt of EMD along with tender என்ற தலைப்பின் கீழ்" The Tender Inviting Authority shall receive EMD and prepare a receipt. The entry is passed by debiting cash or Bank Account and crediting Earnest Money Deposit Account என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் சூழ்நிலையில், ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள, நகராட்சி ஒப்பந்ததாரர்கள் செலுத்திய திரும்ப வழங்கக்கூடிய வைப்புத் தொகையினை, இதற்கென தனியாக கையாளப்படும் வைப்புத்தொகை கணக்கில் (Deposit Account) செலுத்தாமல், நகராட்சியின் பொதுநிதி கணக்கின் கீழ் செலுத்தப்பட்டுள்ளது என்பது மனுதாரரின் முறையீட்டு மனு மூலம் உறுதியாகிறது. இவ்வாறு வைப்புத் தொகை கணக்கு தனியாக பராமரிப்பு செய்யப்படாததன் காரணமாக மனுதாரருக்கு ஒப்பந்தப்பணிகள் முடித்த ஒரு வருடகாலத்திற்குள் வைப்பு தொகையானது திரும்ப வழங்கப்படாமல் ஒப்பந்தாரர்களை அலைக்கழிக்கும் செயலானது நடைபெறுகிறது என்பதை தெள்ளத் தெளிவாக அறிய முடிகிறது.

இவ்வாறு வைப்புத் தொகை கணக்கு தனியாக பராமரிக்கப்படாததால் அதற்கான வட்டி தொகையும் இழந்து நகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதையும், இம்முறைகேடு பல வருடங்களாக பரமக்குடி நகராட்சியில் நடைபெற்று வருவதும் தெளிவாகிறது. மேலும் ஒப்பந்ததாரர்களுக்கு உரிய காலத்தில் திரும்ப வழங்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு நகராட்சியின் அவப்பெயருக்கு காரணமாக அமைகிறது. இவ்வாறு பரமக்குடி நகராட்சியில் தனியாக வைப்புத் தொகை கணக்கினை பராமரிக்காமல் நகராட்சிக்கு ஆண்டுதோறும் பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டதற்கு காரணமான சம்பந்தப்பட்ட கணக்கர், மேலாளர் மற்றும் நகராட்சி ஆணையர் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரித் தொகையினை உரிய கணக்கில் செலுத்தாததும் தெரியவருகிறது. இதுவரை இவ்வாறு பல்வேறு ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி, GST போன்ற தொகைகள் மற்றும் பொது மக்களிடமிருந்து கட்டட அனுமதி போன்ற விண்ணப்பங்களின் மீது பெறப்பட்ட தமிழ்நாடு கட்டுமான பணியாளர் நலநிதி போன்ற கட்டணங்களும் அந்தந்த கணக்கில் முறையாக செலுத்தப்பட்டுள்ளனவா என்பதை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையில் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவம் உத்தரவிடுகிறது. இதில் ஏதேனும் முறைகேடுகள் நடைப்பெற்றிருப்பின் சம்பந்தப்பட்ட கணக்கர், மேலாளர் மற்றும் ஆணையர் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்தரைக்கப்படுகிறது. மேலும் மனுதாரரிடம் பிடித்தம் செய்து வருமான வரி கணக்கில் செலுத்தாத தொகையை உடனடியாக வருமானவரி கணக்கில் செலுத்த பரமக்குடி நகராட்சி ஆணையருக்கு உத்தரவிடப்படுகிறது.

ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்படும் வைப்புத்தொகைகளை இதற்கென தனியாக உள்ள வைப்புத் தொகைக் கணக்கில் செலுத்தி பராமரிக்கப்படவேண்டும் என அனைத்து நகராட்சி ஆணையாளர்களுக்கும் அறிவுறுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.I.குழந்தையம்மாள்,
Y 16–A, 12/338, காமராஜர் நகர்,
பரமக்குடி – 623 707,
இராமநாதபுரம் மாவட்டம்,

2) ஆணையாளர், பரமக்குடி நகராட்சி,
பரமக்குடி – 623 707, இராமநாதபுரம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
மதுரை – 625 016.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலருக்காக

20/09/22